# மலேசியாவில் குடிபுகுந்து சுரண்டலில் சிக்கும் தொழிலாளர்

## அம்னெஸ்டி இன்டர்னேஷனல் அறிக்கையின் சுருக்கம்

AMNESTY INTERNATIONAL

Amnesty International Publications

First published in 2010 by
Amnesty International Publications
International Secretariat
Peter Benenson House
1 Easton Street
London WC1X 0DW
United Kingdom
www.amnesty.org

© Copyright Amnesty International Publications 2010

Index: ASA 28/006/2010
Original Language: English
Printed by Amnesty International, International Secretariat, United Kingdom

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior permission of the publishers.

Cover photo: Amnesty International

Amnesty International is a global movement of 2.2 million people in more than 150 countries and territories, who campaign on human rights. Our vision is for every person to enjoy all the rights enshrined in the Universal Declaration of Human Rights and other international human rights instruments. We research, campaign, advocate and mobilize to end abuses of human rights. Amnesty International is independent of any government, political ideology, economic interest or religion. Our work is largely financed by contributions from our membership and donations.

AMNESTY
INTERNATIONAL

# அறிக்கையின் சுருக்கம்

இங்கே மலேசியாவில் வேலைவாய்ப்புக்கள் கிட்டும் என்ற வாக்குறுதிகளை நம்பி ஆண்டுதேறும் இந்தியா, வங்கதேசம் நேபாளம், வியத்நாம், இந்தோனேசியா, இந்தப் பிராந்தியத்தைச் சார்ந்த இன்ன பிற நாடுகளைச் சார்ந்த ஆடவரும் பெண்டிரும் ஆயிரக்கணக்கில் வருகின்றனர். இப்படிக் குடிவருவோர் தினம் பன்னிரண்டு மணி நேரம், ஏன் அதற்கும் அதிகமாகக் கூட உழைக்கின்றனர். இவர்களின் பணிகளும் பணியிடங்களும் பெரும்பாலும் பாதுகாப்பற்றவை. அங்கெல்லாம் தவிர, பலருக்கும் மலேசியாவுக்கு வருமுன்பாக உறுதிவழங்கப்பட்ட ஊதியம் கிட்டுவதில்லை. கேட்டால் முதலாளிகளிடமிருந்து திட்டு, ஏன் அடி-உதையும்கூடக் கிட்டும்.. இத்தைகைய தொழிலாளிகள் எதிர்கொள்ளும் சுரண்டல், கட்டாய உழைப்பு, நாட்டு எல்லைகள் ஊடாக நபர்களைக் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு மனித உரிமை மீறல்களைத் தடுக்கும் பொறுப்பு மலேசிய அரசுக்கு நிச்சயம் உண்டு.

இப்படி மலேசியாவுக்குக் குடிவருவோர், தங்களிடம் முகவர்கள் (ஏஜெண்ட்கள்) சொன்ன ஏதும் இங்கே சரிவர இருப்பதில்லை. முகவர்கள் முதலில் சொன்ன ஊதியம் கிடைக்காது, முதிலில் சொன்ன முதலாளிக்குப் பதில் வேறொருவர் இருப்பார், சொன்ன பணியும் இருக்காது. முகவர்கள் சிலர் கிட்டவே கிட்டாத பணி பற்றி வாக்குறுதியும் அளித்திருப்பார்கள். இப்படிக் குடிவருவோரில் பலருக்குப் பணி-ஒப்பந்தமென ஏதும் கிடையாது. சிலருக்கு மலேசியா வருமுன்பாக, இறுதி நிமிடத்தில், ஒப்பந்த் ஆவணங்கள் வழங்கப்படும், அவை ஆங்கிலத்தில் இருக்கும், எனவே அவற்றை வாசிக்க முடியாமல் போகும்.

இப்படி மலேசியாவுக்கு குடிவர விழைவோர் முகவர்களிடம் ஏராளமான பணம் அளித்து வேலை பெற விழைகிறார்கள். குறைந்த பட்சமாக ஆயிரம் அமெரிக்க டாலர் வரை தர வேண்டிய நிலை. அதிலும் வங்க தேசத்திலிருந்து வருவோர், ஐந்தாயிரம் டாலருக்கும் அதிகம் தர வேண்டும். தத்தம் வீடுவாசல், நிலபுலன்களை விற்றோ, பெரும்பாலும் கந்துவட்டிக்கு அடகுவைத்துக் கடன்வாங்கியோதான் இந்தத் தொகையைத் தர வேண்டும். பிறகு இந்தக் கடனை அடைத்தாக வேண்டும் என்பதால் பெரும் இன்னல்களைத் யாவற்றையும் சகித்துக்கொண்டு பணியில் தொடர்வதைத் தவிர இவர்களால் ஏதும் செய்ய இயலாமல் போகிறது.

இவர்களில் பலரும் தாம் சுரண்டலுக்கு ஆளாகிறோம் என்று உணர்ந்தாலும் நாடு திரும்பவே முடியாத நிலை. நல்ல பணி கிட்டும் என்ற நம்பிக்கையில் தாம் பட்ட பெரும் கடனை அடைக்க வேண்டுமே எனக் கொத்தடிமையை ஒத்த நிலையில் இவர்கள் சிக்கியிருப்பதே இதற்குக் காரணம்.

இவர்களில் சிலரோ தமக்கென எதையும் தேர்வுசெய்யும் நிலையில் இல்லை. தம் விருப்பத்துக்கு மாறாகப் பணியிடங்களில் சிக்கி, வன்முறையை எதிர்கொள்ளும் அச்சுறுத்தலுக்கு ஆளாகிறார்கள். தத்தம் பணியிடங்களை விட்டு வேறிடம் சென்றாலே கணிசமான அபாயத்தைச் சந்திக்கும் நிலையில் வாழ்கிறார்கள். இவர்கள் தங்கள் கடவுச்சீட்டுக்களை ஆட்சியாளர்கள், காவல்துறையினர் கேட்கும்போதெல்லாம் காட்ட வேண்டும் என்ற நிலையில் இவர்களின் பெரும்பாலோரின் கடவுச்சீட்டுக்களை முதலாளிகளே வைத்திருக்கிறார்கள். கடவுச்சீட்டுக்கள் இல்லாமல் நாடு திரும்ப முடியாது என்ற நிலையும் கூட. இத்தகையோர் படும் பாடுகளும் இன்னல்களும் இவர்கள் கொத்தடிமை நிலையில் வாழ்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றன.

இவர்களில் சிலருக்கு வயது பதினெட்டும் ஆகாத நிலையில் முகவர்கள் வயதைக் கூட்டிச்சொல்லி, போலிக் கடவுச்சீட்டுக்களைப் பெற்று, இவர்களை மலேசியாவுக்கு அழைத்து வருகிறார்கள். பதினெட்டு வயதுக்கும் குறைந்தோரை ஏமாற்றுவது மிக எளிது என்பதால் பணியிடங்களில் மேலதிக உரிமை மீறல்களை, இன்னல்களை, ஏன் அடி-உதையைக் கூட அனுபவிக்கும் நிலையில் இவர்கள் வாழ்கிறார்கள். பல இடங்களில் தாங்கள் செய்யவே கூடாத அபாயகரமான பணிகளில் சிக்கியிருக்கிறார்கள். சிறார்களை அபாயகரமான தொழிற்பணிகளில் ஈடுபடுத்திச் சுரண்டுவதை தடுக்க வேண்டிய பொறுப்பு, பன்னாட்டுச்சட்டப்படி, மலேசியாவுக்கு உண்டு என்றாலும் இதுதான் நிலை.

வெளிநாடுகளிலிருந்து மலேசியாவுக்கு வந்து பணிபுரியும் தொழிலாளரின் அதிகாரப்பூர்வ எண்ணிக்கை சுமார் இருபத்திரண்டு லட்சம். ஏறத்தாழ இதே எண்ணிக்கைத் தொழிலாளர்கள் மேலதிகமாக, முறையான ஆவணங்கள் இன்றிப் பணியில் இருக்கிறார்கள். இவர்களில் பலர், திட்டமிட்ட முறையில் ஏமாற்றப்பட்டு, சட்டப்பூர்வமற்ற முறையில் கொண்டுவரப்பட்டு, சுரண்டலுக்கு ஆளானோர். சொல்லப்போனால் இப்படி ஆட்களைக் கடத்திக்கொண்டுவந்து சுரண்டும் நாடுகளின் வரிசையில் மலேசியாவுக்கு முதலிடம் என்று, கடந்த ஆண்டு அமெரிக்க அரசுத்துறை வெளியிட்ட அறிக்கை கூறுகிறது. இப்படி ஆட்களைக் கடத்திக் கொண்டுவந்து சுரண்டும் செயற்பாடுகளைத் தடுக்கக் கிஞ்சித்தும் முயற்சி எடுக்காத, குறைந்தபட்ச நடவடிக்கைகளைக் கூட மேற்கொள்ளாத, படுமோசமான நாடுகளில் வரிசையில் மலேசியாவை இந்த அறிக்கை வைக்கிறது.

மலேசியாவுக்குத் தொழிலாளர்களை இப்படிக் கடத்திக்கொண்டுவந்து சுரண்டும் முறையை ஊக்குவிப்போர் முகவர்கள் என்ற தனிநபர்கள்தாம் என்றாலும் இந்தப்போக்கை மலேசிய அரசும் ஊக்குவிக்கிறது என்றே கூறவேண்டும். முகவர்களின் செயற்பாடு குறித்த சட்டங்களில் ஓட்டைகள், தொழிலாளர் சட்டங்களில் மற்றும் கொள்கைகளில் முறைகேடுகள், பிறகு தொழிலாளர்களின் கடவுச்சீட்டுக்களை முதலாளிகள் கைப்பற்றி வைத்துக்கொள்ள அனுமதிக்கும் வழக்கங்கள் ஆகியவை, வெளிநாட்டுத் தொழிலாளரை மலேசியாவுக்குக் கடத்திக்கொண்டுவந்து சுரண்டும் செயற்பாடுகள் செழிக்கக் காரணங்களாக அமைகின்றன.



இத்தகைய மோசமான முறைகேடுகளில் மலேசியக் குடிவரவு அதிகாரிகள் சிலரும் ஈடுபட்டு வருகிறார்கள். அதாவது, குடிவரவுத்துறை தடுத்துவைத்த தொழிலாளர்களை, தாய்லாந்து எல்லையோரமாகச் செயற்படும் முகவர்களிடம் இவர்கள் கையளித்து வருகிறார்கள். 2006-ஆம் ஆண்டுக்கும் 2009-ஆம் ஆண்டின் தொடக்கத்துக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் இப்படிக் கையளிக்கப்பட்ட பன்னிரண்டுக்கும் அதிகமான பேர் பற்றிய விபரங்களை அம்னெஸ்டி இண்டர்நேஷனல் அமைப்பு சேகரித்திருக்கிறது. இவர்களில் சிலர் மீண்டும் மீண்டும் கைதாகிக் கையளிக்கப்பட்டவர்கள்.

வெளிநாட்டிலிருந்து மலேசியாவுக்குக் குடிவந்து பணியாற்றும் தொழிலாளர்கள் பெரும்பாலோரை மலேசியா நாட்டின் சட்டங்கள் பாதுகாத்தாக வேண்டும் என்றாலும் உண்மையில் அப்படி நடப்பதில்லை. இந்தச்சட்டதிட்டங்களை ஆட்சியாளர்கள் செயற்படுத்துவதில்லை என்பதால், முகவர்கள்-முதலாளிகளின் கைகளில் சிக்கும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலைதான்.

மலேசியாவின் தொழிற்சாலைகள்-கடைகளின் இப்படிப் பணிபுரிவோரை விட வீடுகளில் பணிபுரிவோரின் நிலை படுமோசம். நாட்டின் தொழிலாளர் உரிமைச்சட்டங்கள் இவர்களைத் திட்டவட்டமாகப் புறக்கணித்தே வந்திருக்கின்றன. இதன் விளைவாக, பெண்களும் சிறுமியரும் பெரும்பாலும் ஈடுபடும் இவ்வகைப் பணிக்குத் தொழிற்பாதுகாப்பு என்பது இன்னமும் குறைவு. ஆனால் தொழிலாளர் உரிமைச் சட்டங்களின் செயற்பாட்டிலிருந்து வீட்டுப்பணியை விலக்கிவைத்திருப்பதற்கு எவ்வித நியாயப்பாடும் இல்லை. எங்கோ ஓர் வீட்டில் பணியில் இருக்கும் ஒரு பெண்ணுக்கோ, சிறுமிக்கோ மேலதிகப் பாதுகாப்பு தேவைப்படும் நிலையில் இவர்களை இப்படி விலக்கி வைப்பதை, பாகுபாடு என்ற உரிமை மீறலாகவே கருத வேண்டும்.

மலேசியாவில் குடிவரும் தொழிலாளர்களை மிரட்டுவதிலும் பணம் பறிப்பதிலும் இந்நாட்டுக் காவற்துறையும் சரி, இகட்டன் ரெலெவான் ரக்யத் என்ற மக்கள் தன்னார்வப் படையினரும் சரி, வாடிக்கையாக ஈடுபட்டு வருகின்றனர். குடிவரவு குறித்த விசாரணையை மேற்கொள்ளும் அதிகாரம் மலேசியக் காவற்துறைக்கு உண்டு. இதே அதிகாரம், இகட்டன் ரெலெவான் ரக்யத் படையினருக்கும் கடந்த ஆண்டின் இடைப்பகுதி வரை இருந்தது. இந்த அதிகாரத்தை மோசமாகப் பயன்படுத்தி விசாரணை என்ற பேரில் பணம்பறிப்பதில் இருதுறையினரும் அடிக்கடி ஈடுபட்டு வருகின்றனர்.

வெளிநாடுகளிலிருந்து குடிவரும் தொழிலாளர்கள் இன்றி மலேசியா செயற்பட இயலாது என்ற போதும் குடிவரல் என்ற பிரச்னையைக் குற்றச்செயலாகக் கருதி ஒதுக்குவதே இந்நாட்டு அரசின் பொதுவான அணுகுமுறையாக இருக்கிறது. நாட்டின் சாலைகளில், அங்காடிப்பரப்புக்களில் வைத்து, யாவரும் காண இத்தகைய தொழிலாளர்களைப் பிடிப்பதும் தனிநபர் வதிவிடங்களில், வறியோர் வசிக்கும் பகுதிகளில் என பல இடங்களில் இருப்போரின் குடிவரல் அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல் யாவரையும் சந்தேக நபர்களாகக் கருதி, சட்டப்பூர்வமற்ற முறையில் அதிரடி சோதனைகளைக் கண்டபடி மேற்கொள்வதும் வாடிக்கையாகிவிட்டது. குடிவரல் தொடர்பான பிரச்னைகளை, முதலில் கைது, பிறகே விசாரணை எனக் கையாளும் நிலையே நீடிக்கிறது. நிஜத்தில் மனித உரிமை மீறல்களைச் செய்வோரை விடுத்து அவற்றில் சிக்கி இன்னலுறும் தொழிலாளர்களையே இலக்கு வைத்துத் தண்டிப்பதாக மலேசிய அரசின் செயற்பாடுகள் அடிக்கடி அமைந்து விடுகின்றன.

மலேசியாவுக்குக் குடிவந்து பணியாற்றும் தொழிலாளர் எவரும் தங்கள் குடிவரல் அந்தஸ்தை ஒரே நிமிடத்தில் இழந்து விடலாம். இவர்களுடைய அனுமதிச்சீட்டுக்களைத் தக்க நேரத்தில் புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்ற நிலையில் முதலாளியர் இதைச் சரிவரச் செய்யத் தவறிவிட்டால் இந்த

அந்தஸ்து இவர்கள் அறியாமலேயே பறிபோய், இவர்கள் அடையாளமற்றோராகி விடுவார்கள். தவிர, தங்களை முதலாளியர் மோசமாக நடத்துகிறார்கள் என்று முறையீடு செய்யும் தொழிலாளர்களைக் குடிவரல் சட்டத்தை மீறிவிட்டதான சில சட்டச்சிக்கல்களைச் சுட்டிக்காட்டிக் கைதுசெய்த சம்பவங்களையும் அம்னெஸ்டி இண்டர்நேஷனல் அமைப்பு ஆவணப்படுத்தியிருக்கிறது. அதாவது, குடிவரல் சட்டங்களின் செயற்பாடே முக்கியம், நீதிமறுப்பைப் புறக்கணிப்போம் என்ற வகையில் மலேசியா அடிக்கடி இயங்குகிறது.

இப்படி அடையாளமும் ஆவணங்களுமற்று இருப்போருக்குக் கிட்டும் தண்டனை கடுமையானது. அபராதம், சிறைவாசம் மற்றும் நாட்டை விட்டு வெளியேற்றம் என அது நீளும். தவிர, சட்டத்தை மீறிக் குடிவருவோருக்குப் பிரம்படித் தண்டனையையும் நீதிபதிகள் அடிக்கடி தரும் வழக்கமுண்டு. 2002-2008 காலகட்டத்தில் இப்படிப் பிரம்படி வாங்கியோரின் எண்ணிக்கை முப்பத்தைந்து ஆயிரம்.

குடிவரல் சட்டத்தை மீறியதற்காகக் கைதாவோர் தடுத்துவைக்கப்பெறும் மையங்களில் உள்ள நிலைமை, பன்னாட்டு நியதிகளைக் காட்டிலும் படுமோசமாக இருக்கிறது. முதல் பிரச்னை, கடும் இட நெருக்கடி. அம்னெஸ்டி இண்டர்நேஷனல் அமைப்பினர் சென்று கண்ட மூன்று மையங்களில் கடும் இட நெருக்கடி. இங்கே சிலர், தங்கள் இருபுறத்தும் உள்ளோர் மேல் படாமல் உறங்கவும் இயலாது என்கிறார்கள். படுக்கைகள் இல்லை, சுத்தமான நீர் இல்லை, உடல்நலம் குறைந்தால் மருந்தில்லை. கடும் பசி. சரிவரச் சமைத்த உணவு கிட்டுவதில்லை. அப்படிக் கிட்டும் உணவும் அழுகியிருக்கும். தங்கள் சிறைக்கூடங்களில் ஏதும் செய்யாமல், காற்று வாங்கக் கூட வெளியில் செல்லாமல் கிடக்க வேண்டும். உடற்பயிற்சிக்கு வழியில்லை. இத்தகைய நிலைமைகளில் நோய்கள் வேகமாகப் பரவுகின்றன. கைதிகளுக்கிடையே அடிக்கடி சண்டைகள் வேறு. காவலர்கள் கைதிகளைத் தாக்குவது பற்றியும் அம்னெஸ்டி இண்டர்நேஷனல் அமைப்புக்குச் செய்திகள் கிட்டின. தவிர, பதினெட்டு வயதுக்கு உட்பட்டோர், தம்மைவிட மூத்தோருடன் ஒரே சிறைகளில் வைக்கப்படுவதுமுண்டு. இது பன்னாட்டுச் சட்டங்களுக்கு எதிரானது.

குடிவரவுச் சட்டத்தை மீறிய குற்றம் உறுதியானால் குற்றவாளிகளுக்கு ரோத்தன் என்ற மெல்லிய பிரம்பால் ஆறு அடிகள் வரை தண்டனை வழங்கப்படும். பிரம்படி என்பது மிக அவமானகரமாக நிகழ்வு. வலியோ பயங்கரமானது. குண்டியில் ஏற்படும் வரிவரியான காயமும் வடுவும் ஆறப் பல நாளாகும். நடக்கவும் பல நாளாகும். சித்திரவதை, மற்றும் கொடூரமான தண்டனை வழங்குதலைத் தடைசெய்யும் பன்னாட்டு உடன்படிக்கையை

மீறுவதாக இத்தகைய தண்டனை அமைகிறது.

குடிவருவோர் தவிர, அகதிகள் மற்றும் அரசியல் தஞ்சம் கோருவருக்கான புகலிடமாகவும் பலர் மலேசியாவுக்கு வருகின்றனர். குறைந்த பட்சம் தொண்ணூறாயிரம் பேரிலிருந்து ஒரு லட்சத்து எழுபதாயிரம் பேர் வரை இப்படி வருகின்றனர். குறிப்பாக மியான்மார், பிலிப்பைன்ஸ் நாடுகளிலிருந்து வருவோர் அதிகம். ஆனால், 1951-ஆம் ஆண்டு அகதிகள் பன்னாட்டு உடன்படிக்கையிலும் சரி, 1967-ஆம் ஆண்டு வந்த அகதிகள் பாதுகாப்பு குறித்த துணை-ஒப்பந்தத்திலும் சரி, மலேசியா கையொப்பமிடவில்லை. தவிர, அகதிகள் மற்றும் சட்டத்தை மீறிக் குடியேறுவோர் ஆகியோரை வித்தியாசப்படுத்திக் காணும் வகையில் சட்டமெதையும் மலேசியா இயற்றவுமில்லை.

இதன் விளைவாக, அகதிகள் மற்றும் அரசியல் தஞ்சம் கோருவோர் எவரும் குடிவரவுச்சட்டத்தை மீறியோர் என்று குற்றம் சாட்டப்பெற்று தடுத்துவைக்கப்படலாம், வழக்கு விசர்ரணைக்கு உட்படலாம், பிரம்படி பெறலாம், தவிர, பணியிடங்களில் சுரண்டலுக்கு ஆளாகலாம், காவற்துறை மற்றும் தன்னார்வப் படையினரின் மீறல்களைச் சந்திக்க நேரிடலாம் என்ற நிலையே மலேசியாவில் நீடிக்கிறது.



*    *    *

2009-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அம்னெஸ்டி இண்டர்நேஷனல் அமைப்பைச் சேர்ந்த நான்கு பேர் குழு, மலேசியா சென்று, இருநூறுக்கும் மேற்பட்ட, ஆவணங்கள் கொண்ட மற்றும் ஆவணங்கள் அற்ற இத்தகைய தொழிலாளர்களை நேர்காணல் செய்தது. அரசு அதிகாரிகள், முதலாளிகள், முகவர்கள், வழக்கறிஞர்கள், அரசு சாரா அமைப்புக்கள், மத அமைப்புக்களின் உறுப்பினர்கள், பிற நாட்டுத் தூதரகங்கள் உள்ளிட்ட பலரையும் சந்தித்தது.

தவிர, கோலாலம்பூர் அருகே தடுத்துவைக்கப்பட்டோருக்கான மூன்று மையங்களைச் சென்று கண்டது. இவற்றில் ஒரு மையத்தில் செயல்படும் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளையும் கண்டது. நடந்து முடிந்த, நடந்து கொண்டிருந்த தொழிலாளர் மற்றும் தொழிலுறவுத் துறை வழக்குகள் குறித்த ஆவணங்களையும் பரிசீலனை செய்தது.

## மலேசிய அரசு முன்னுரிமை தந்து கீழ்க்கண்டவற்றை நிறைவேற்ற வேண்டும் என அம்னெஸ்டி இண்டர்நேஷனல் கோருகிறது:

* தொழிலாளர்களை வெளிநாடுகளிலிருந்து தருவிப்பதை ஒப்பந்தப்பணிக்கு விடும் வழிமுறையை சீர்திருத்தும் வகையில் உடன் மறுபரிசீலனை செய்க

* முதலாளிகள் தொழிலாளிகளின் கடவுச்சீட்டுக்களைக் கைப்பற்றி வைத்திருப்பது குற்றம், இதை மீறுவோருக்கு அபராதம் என உடன் அறிவித்து, அதற்கேற்ப சட்டதிட்டங்கள், ஒப்பந்தங்களை மாற்றி அமைத்திடுக.

* முறைகேடு, ஏமாற்றுவேலைகளில் ஈடுபட்டுத் தொழிலாளர்களைச் சுரண்டும் முகவர்கள்மீது, ஆட்களை முறைகேடாகத் தருவித்துக் கடத்துவோருக்கு எதிரான மலேசியச்சட்டத்தின் படி வழக்கு தொடர்க.

* பணியிடங்களில் நடத்தும் சோதனைகளை அதிகப்படுத்தி, முறைகேடாகக் கட்டாய உழைப்பு மற்றும் சுரண்டலில் ஈடுபடும் முதலாளிகள் மீது வழக்குத் தொடரும் ஏற்பாடுகளைச் செய்க – அதாவது பணியிடங்களில் நடக்கும் முறைகேடுகளைக் களைவதே இந்தச் சோதனைகளின் நோக்கமாக இருக்க வேண்டுமே ஒழிய, தொழிலாளர்களின் குடிவரல் அந்தஸ்து என்ன என நிர்ணயிப்பதல்ல இவற்றின் நோக்கம்.

* காவற்துறை மற்றும் தன்னார்வப் படையினரின் பணம்பறித்தல் மற்றும் மிரட்டல் செயல்கள் குறித்த முறைகேடுகளைத் தீர விசாரித்திடுக.

* குடிவரல் சட்டங்களை மீறியோரைத் தடுத்துவைக்கும் மையங்கள், டிப்போக்கள் குறைந்தபட்ச பன்னாட்டு நியதிகளின்படி அமைய வேண்டும் என்பதை உறுதிசெய்க.

* மலேசியாவுக்குத் தொழிலாளரை அனுப்பும் நாடுகளுடன் செய்துகொள்ளும் உடன்படிக்கையில் மனித உரிமைப் பாதுகாப்பு விதிகளைப் பலப்படுத்துக. அதற்கேற்ப அந்தந்த நாடுகளில் செயற்படும் முகவர்களின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதை உறுதிசெய்க.

இந்தக்குழு குடிவரல் தொழிலாளர்களின் அனுமதி பெற்றே அவர்களை நேர்காணல் செய்தது. குறித்த நிரல் படிவத்தின் அடிப்படையில் இந்த நேர்காணல்கள் நடந்தன. அவர்களின் மேலதிகக் கூற்றுக்களும் இவற்றில்

இடம்பெற்றன. நேர்காணல்கள் ஆங்கிலத்திலும் பஹாசா மலேசிய மொழியிலும் தேவைப்பட்ட போது மொழிமாற்றத்துடன் நடந்தேறின. சில நேர்காணல்களை, பிரெஞ்சு மற்றும் ஸ்பானிஷ் மொழித் திறன் கொண்டவர்கள் செய்து முடித்தனர். கோலாலம்பூர் கூட்டாட்சிப் பகுதி மற்றும் செலங்கோர், பஹாங் மாநிலங்களில் இவை நடந்தேறின. சில தொழிலாளர்கள் மலேசியாவின் பிற பகுதிகளில் தமக்கேற்பட்ட அனுபவங்களையும் விவரித்தார்கள். குடிவரவுத் தொழிலாளர்களின் பாதுகாப்பு கருதி அவர்கள் யாவருடைய பெயர்களும் மாற்றப்பட்டுள்ளன.

மலேசியாவின் கிழக்குப் பகுதி சபா, சராவக் மாநிலங்களில் உள்ள குடிவரவுத் தொழிலாளர்கள் பற்றி இந்த அறிக்கை பரிசீலிக்கவில்லை. இந்த மாநிலங்கள் தனித்த குடிவரவு மற்றும் தொழிலாளர் சட்டங்களைக் கொண்டவை.

அம்னெஸ்டி இண்டர்நேஷனல் குழுவைச் சந்திக்க மலேசிய அரசு முன்வந்ததையும் இந்தக் குடிவரல் தடுப்பு மையங்களைப் பார்வையிட அனுமதி அளித்ததையும் அம்னெஸ்டி இண்டர்நேஷனல் அமைப்பு பாராட்டுகிறது.

